படிக்க எடுத்துக்கொண்ட நேரம் ______________________



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

# 12 இணைப்புச்சொல்

## 12.1 விடுபட்ட இடங்களில் உரிய இணைப்புச் சொல்லை எடுத்து எழுதுக.

ஏனெனில், ஆகவே, அதற்காக, எனவே, இருந்தாலும், ஆனால்



நேற்று எங்கள் பள்ளியில் ஆண்டு அறிவியல் கண்காட்சி நடந்தது. ________________ விடுப்பு எடுக்காமல் எல்லா மாணவர்களும் உற்சாகமாகப் பங்கேற்றனர். பள்ளியின் திடல் நிறைய வண்ண அலங்காரங்களால் அழகாக அமைக்கப்பட்டிருந்தது. அது ஒரு விழாவைப் போல் தோன்றியது. நான் மற்றும் என் நண்பர்கள் சேர்ந்து ஒரு சூரிய ஆற்றல் மின் உற்பத்தி மாதிரி செய்தோம். ________________ அது மின்சாரம் தயாரிப்பதற்குச் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நல்ல வழி. இந்த மாதிரியைத் தயாரிக்க பல நாள்கள் முயற்சி செய்தோம். ________________ பல புத்தகங்கள், இணையத்தளங்கள் மூலம் தகவல்கள் சேகரித்தோம்.

எங்கள் திட்டத்தைப் பலர் பாராட்டினார்கள். ________________ சிலர் இன்னும் வடிவமைப்பை மேம்படுத்தலாம் என்று கூறினர். அந்தக் கருத்துகளை ஏற்றுக் கொண்டோம். ________________ அடுத்தமுறை அது மேலும் சிறப்பாக அமையும். போட்டியில் முதல் பரிசு பெறவில்லை. ________________ நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தோம். பல புதிய செய்திகளைக் கற்றுக்கொண்டோம் மற்றும் ஒருங்கிணைந்து வேலை செய்வது எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டோம்.

www.kanimaths.com

## 12.2 இணைப்புச் சொல்லைப் பயன்படுத்தித் தொடரை உருவாக்குக.

- ஆனால்

_______________________________________________

- ஆகையால்

_______________________________________________

- ஏனெனில்

_______________________________________________

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## 12.3 கதையைப் படித்துக் கண்மணியின் செயல் பற்றிப் பேசுக.

### மாணவர் தலைவர்!

பள்ளியில் மாணவர் தலைவரைத் தேர்ந்தெடுக்க உள்ளார்கள். மாணவர்கள் கண்மணியின் பெயரைப் பரிந்துரைத்து இருந்தனர். ஒருவார காலம் பொறுப்பெடுத்துச் செயல்படுமாறு தலைமையாசிரியர் கூறியிருந்தார். அக்காலத்தில் சரியாகச் செயல்பட்டால் பள்ளியின் மாணவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் கூறியிருந்தார்.

கண்மணி மிகச்சிறப்பாகச் செயல்படத் தொடங்கினாள். காலைவணக்கக் கூட்டத்திற்கான பணிகளைப் பலருக்கும் பிரித்துக் கொடுத்து மிகச் சிறப்பாக நடத்துவது, தகவல் பலகையில் தேவையான தகவல்களை எழுதுவது, பள்ளி நூலகத்தைப் பராமரிப்பது மற்றும் அனைவரையும் பயன்படுத்தச் செய்வது போன்ற பலவற்றையும் சக மாணவர்களை இணைத்துக் கொண்டு செயல்படுத்தினாள். இவ்வாறு முதல் நான்கு நாள்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டாள். இதை ஆசிரியர்கள் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

இன்று ஐந்தாவது நாள், பள்ளி முடிந்து மணி அடிக்கும் நேரம் நெருங்கியும் மணி அடிக்கவில்லை. தலைமையாசிரியர் கண்மணியிடம் சரியான நேரத்தில் மணி அடிப்பதைக் கண்காணிக்கும்படி சொல்லியிருந்தார். ஆனாலும், மணி அடிக்கவில்லை; சில நிமிடங்கள் காத்திருந்து விட்டு, ஏன் இன்னும் மணியடிக்கவில்லை? கண்மணி என்ன செய்கிறாள்? கண்மணியை அழைத்து ஏன் இன்னும் மணி அடிக்கவில்லை? என்று கேட்டார். பள்ளி வாயிலில் ஒரு கண்ணாடி நொறுங்கிக் கிடந்தது. மாணவர்கள் வாயிலின் வழியே வெளியேறும்போது கண்ணாடித் துண்டுகள் குத்திவிடும். அதனால்தான் மணியடிக்க வேண்டாம் என்று கூறியிருந்தேன். தற்போது அவற்றைச் சுத்தம் செய்துவிட்டோம். இனி மணியடிக்கலாம். சரியான நேரத்தில் மணியடிக்க முடியாமல் போனது தவறுதான் என்று தன் வருத்தத்தைக் கண்மணி தெரிவித்தாள். இப்போது மணியடிக்கச் சொல் என்று தலைமையாசிரியர் கூறினார். மாணவர் தலைவராகத் தான் தேர்ந்தெடுக்கப்படுவோமா இல்லையா என்ற குழப்பத்திலேயே கண்மணி சென்றாள்.

திங்கள்கிழமை காலைவணக்கக் கூட்டத்தில் மாணவர் தலைவராகக் கண்மணி தேர்ந்தெடுக்கப்படுகிறாளா இல்லையா என்பதைத் தலைமையாசிரியர் தெரிவிக்க இருக்கிறார். தலைமையாசிரியர் பேசத் தொடங்கினார். கண்மணிக்கு ஒருவார காலம் வாய்ப்பளிக்கப்பட்டது. முதல் நான்கு நாள்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். பள்ளியின் முன்னேற்றத்திற்காக நண்பர்களோடு இணைந்து சில பரிந்துரைகளையும் வழங்கியுள்ளார். ஆனால், ஐந்தாவது நாளான வெள்ளியன்று மாணவர்களைச் சரியான நேரத்தில் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதற்குக் கண்மணிதான் காரணமும்கூட என்றுகூறிப் பேச்சை நிறுத்தினார். கண்மணி தலையைக் குனிந்தவாறு நின்றிருந்தாள். அவளை அருகே அழைத்த தலைமையாசிரியர் அவள் தோளைத் தட்டியபடி சரியான நேரத்தில் சரியாகச் செயல்பட்டாள் கண்மணி. மாணவர் தலைவருக்கு அதுவே அடையாளம் எனக்கூறி, கண்மணியைத் தேர்ந்தெடுப்பதை அறிவித்துப் பாராட்டுகளைத் தெரிவித்தார். கண்மணிக்கு மட்டுமல்ல மாணவர்கள் அனைவருக்கும் அது மகிழ்ச்சியைத் தந்தது. கைதட்டல் ஓசை நீண்டநேரம் கேட்டது.

படிக்க எடுத்துக்கொண்ட நேரம் ______________________



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education


www.kanimaths.com

# 13 இரட்டைச்சொல்

## 13.1 தொடரை உரிய படத்துடன் இணைக்க.

1. மரத்திற்கு மரம் தாவித்தாவிச் சென்றது.
2. நகைச்சுவையைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தனர்.
3. வேகமாக வீசியதால் மடமடவென விழுந்தன.
4. படபடவெனச் சிறகடித்துப் பறந்தன.
5. சடசடவெனப் பெய்தது.
6. மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும்.
7. காட்டில் துள்ளித்துள்ளி ஓடியது.









www.kanimaths.com

## 13.2 இரட்டைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. கலகல – சுதாகர் கலகல எனப் பேசினான்.
2. குடுகுடு – ____________________
3. சலசல – ____________________
4. மெல்ல மெல்ல – ____________________
5. சிறு சிறு – ____________________
6. கேட்டுக் கேட்டு – ____________________

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## 13.3 கட்டுரையைப் படித்து உங்கள் கருத்தை வகுப்பறையில் கூறுக.

### தொழில்நுட்பம் – நம் நண்பராக!

இன்று நாம் வாழும் காலம் "தொழில்நுட்பக் காலம்" என்று அழைக்கப்படுகிறது. கணினி, அலைபேசி, இணையம், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பக் கருவிகள் பெரியவர்கள் மட்டுமின்றி சிறுவர்களின் வாழ்விலும் முக்கிய இடம்பிடித்துள்ளன. ஆனால், தொழில்நுட்பங்களை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். சரியான முறையில் பயன்படுத்தினால், அது நம்மை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும்.

### தொழில்நுட்பத்தின் பயன்கள்:

**கற்றல் துணைக்கருவி**



இணையத்தில் உள்ள காணொலிகள், மின்நூல்கள், கல்விக்கான செயலிகள் போன்றவை பள்ளிப் பாடங்களை மேலும் எளிதாகக் கற்றுத் தருகின்றன.

**திறன் மேம்பாடு**

குறும்பட உருவாக்கம், அசைவுப் படங்களை (animation) உருவாக்குவது போன்ற திறன்களை மேம்படுத்த உதவுகின்றன.

**தகவல் தேடல் மற்றும் ஆய்வு**

பாடம் தொடர்பான தகவல்களை இணையத்தில் விரிவாகத் தேடி எடுக்க முடியும். ஆனால், உண்மையான மற்றும் நம்பகமான தகவல்களைத் தேர்வு செய்வது முக்கியம்.

**மொழித்திறன்கள்:**

வினாடிவினா செயலிகள், இணையவழிக் கற்றல் செயலிகள், மொழிச் செயலிகள் ஆகியவை நம் தமிழ், ஆங்கில மொழித்திறனை மேம்படுத்த உதவுகின்றன.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு:**

தொழில்நுட்பம் மூலம் காற்றின் தரம், பசுமைத் திட்டங்கள், கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வைத் தரும் செயலிகள்கூட இருக்கின்றன.

### முக்கியமான நெறிகள்

ஒவ்வொரு நாளும் கால வரையறையுடன் மட்டுமே அலைபேசி / கணினியைப் பயன்படுத்த வேண்டும்.

சமூக ஊடகங்களில் நேரத்தை வீணாக்காமல் அறிவுத் தகவல்களைத் தேடவேண்டும்.

**இணையவழியில் செயல்படுவதில் பாதுகாப்பு முக்கியம்** : பெரியவர்கள் அனுமதி இல்லாமல் எந்த ஓர் இணையத்தளத்திலும் தகவல்களைப் பதிவிடக் கூடாது.

செயற்கை நுண்ணறிவைத் (AI) தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

தொழில்நுட்பம் என்பது ஒரு கூர்மையான கத்தி போன்றது. நம் வளர்ச்சிக்குத் துணையாகவும், அதே நேரத்தில் சோம்பலுக்கு வழிகாட்டியாகவும் இருக்கும். எனவே, அதை நம் நட்பாக மாற்றி, கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துவோம்.

படிக்க எடுத்துக்கொண்ட நேரம் ______________________

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 14 இணைமொழி

## 14.1 இணைச்சொற்களை அடிக்கோடிட்டு விடுபட்ட இடங்களில் நிரப்புக.

- சாலைகளின் இருபுறமும் பனை மரங்கள் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தன.
- ஏற்காட்டிற்குச் செல்லும் மலைப்பாதை வளைந்து நெளிந்து செல்லும்.
- எங்கள் கிராமத்தில் எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென வயல்வெளிகள் உள்ளன.
- மழை பெய்ததால் சாலைகளில் மேடுபள்ளம் உள்ளன.


குமரன்

கொடைக்கானல் மலை எவ்வளவு ________________ அமைந்துள்ளது பார்த்தாயா!




குழலி

அங்கே பார்! மலையில் ________________ உள்ளன.





மலைகளுக்கு அருகில் ____________________ வயல்கள் உள்ளன.


குமரன்



மலைப்பாதையில் ____________________ பேருந்து செல்வது எனக்கு மிகவும் பிடித்துள்ளது.


குழலி

www.kanimaths.com

## 14.2 உரையாடலைப் படித்து உங்கள் அனுபவத்தைப் பேசுக.

### எங்கே போகலாம்?

**அனு** : இந்த விடுமுறை எப்படிச் சென்றது? நீ எங்கே சென்றாய்?

**ராஜா** : முன்பே, சொல்லியிருந்தேனே! பாட்டி வீட்டுக்குச் சென்றேன். பாட்டியின் ஊர் தேனி அருகே உள்ளது. அந்த ஊர் எப்படி இருந்தது தெரியுமா? பாட்டி வீட்டிலிருந்து நடந்துபோகும் தொலைவில் ஓர் ஆறு ஓடுகிறது. நான் நாள்தோறும் மாலைநேரத்தில் பாட்டியுடன் அங்கே சென்று மணலில் விளையாடினேன். பசுமையான வயல்கள், தென்றல் காற்று, பறவைகளின் ஓசை... இன்னும் என் மனத்தைவிட்டு நீங்கவில்லை.

**அனு** : ஓ! அப்படியா?

**ராஜா** : விடுமுறைக்கு நீ எங்கே சென்றாய்?

**அனு** : நான் கொடைக்கானலுக்குச் சென்றேன். ஒவ்வொரு மலையும் மழையில் நனைந்ததைப் போல காட்சி தந்தன. மலையுடன் போட்டிப் போடுவது போல மரங்களும் உயர உயரமாக வளர்ந்திருந்தன. அங்குள்ள பூங்காவில் பார்த்த பூக்களெல்லாம் இன்னும் மனத்தைவிட்டு நீங்காமல் உள்ளன; வகைவகையான பூக்கள் இருந்தன. ஏரி, குகைகளையும் பார்த்தேன். அங்கே ஒரு சிறிய அருவி, என்ன அழகு தெரியுமா! அருவியில் தண்ணீர் விழும் ஓசையைக் கேட்டதும் மனம் குளுகுளுவென்று ஆகிவிட்டது.

**ராஜா** : அருவியைப் பார்த்தாயா? பாட்டி ஊரில் ஒரு கால்வாய்கூட ஓடுகிறது. அங்கே மான்கள் வந்து தண்ணீர் குடிப்பதைப் பார்த்தேன். மழையில் நனைந்துவிட்டேன். மாலையில் பாட்டி சூடாகச் சுக்கு நீர் கொடுத்தாங்க! அருமையாக இருந்தது.

**அனு** : அருமை, நீ சொல்வதைக் கேட்டாலே எனக்கும் ஒரு சிறிய கிராமத்திற்குப் போய்ப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது.

**ராஜா** : ஒருநாள், அங்கும் மழை பெய்தது. நனைந்த மண்ணிலிருந்து ஒரு வாசனை வந்தது. அதற்காகவே மீண்டும் வருவேன் என்று சொல்லிட்டு வந்தேன்.

**அனு** : இந்த விடுமுறை நம் இருவருக்குமே மிகப் பிடித்ததாக இருந்திருக்கிறது அல்லவா?

**ராஜா** : உண்மைதான் மகிழ்ச்சி!

படிக்க எடுத்துக்கொண்ட நேரம் ____________________

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 15 மயங்கொலி

## 15.1 உரிய சொற்களைத் தெரிவுசெய்து எழுதுக.

1. தனி (தனி, தணி) மரம் தோப்பாகாது.
2. ஆற்றங் ________ (கறையில், கரையில்) மரங்கள் உண்டு.
3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் ________ (கலகம், கழகம்).
4. பிறரைப் ________ (பழி, பலி) சொல்லக்கூடாது.
5. குடிநீர்க் ________ (குளம், குலம்) தூய்மையாக இருக்க வேண்டும்.
6. வாத்தின் ________ (அலகு, அளகு) தட்டையாயிருக்கும்.

## 15.2 பத்திகளுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

________ நேரம் நேற்று விடாமல் ________ பெய்த காரணமாக எங்கே பார்த்தாலும் ________. வீட்டிற்கு வெளியே வந்தபோது மரத்திலிருந்து நீர்த்துளிகள் என் ________ மீது சொட்டின. உலரவைத்த துணி காற்றில் பறந்து மரக்கிளைகளில் சிக்கியிருந்தது. ஏணிமீது ________ மரக்கிளையில் இருந்த துணியை எடுத்தேன். அதில் ________ படிந்திருந்தது. நேற்று விரித்த மீன் ________ சட்டென நினைவுக்கு வந்தது. ஆற்றை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெள்ளம் / வெல்லம் | காளை / காலை | தழை / தலை | வலை / வளை | மழை / மலை | ஏரி / ஏறி | கறை / கரை |

ஒரு ________ அடிவாரத்தில் ________ ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அருகில் ஆடு ஒன்று ________ தின்று கொண்டிருந்தது. இரண்டுக்கும் தாகம் எடுத்தது. அருகில் தண்ணீர் இருந்த ________ நோக்கி நடந்தன. ஏரிக் ________ ஓரத்தில் இருந்த ________ ஒன்றிலிருந்து எலி வந்தது. இனிப்பான ________ தின்றதால் எலிக்கும் தாகம் எடுத்தது. மூன்றும் தண்ணீர் குடித்தன. விளையாடி மகிழ்ந்தன.

## 15.3 பத்தியைப் படித்து மயங்கொலிப் பிழை நீக்கி எழுதுக.

### குறிஞ்சி நாட்டின் வளம்

மழை நாட்டில் விளங்குகள் நினைத்துப் பாற்க்காத இண்பத்தை அடையும். வேங்கை மலரும் பூத்திருக்கும். நிலாவும் வலர்பிறையில் இருக்கும் போது அலகாகக் காட்சிதரும். இழையை உடைய வாலைமரப் பெருங்குழையில் நன்றாக முதிர்ந்த வாலைப்பழும் தானே உதிரும். தெவிட்டி உன்னமுடியாமல் போன பலாச்சுழையும் கிடக்கும். இரண்டும்பாறையில் இருக்கும் ஆளமான சுணைநீரில்ஊரும். மிலகுக்கொடி படர்ந்திருக்கும் சந்தண மறத்தில் ஏற முடியாமல் தல்லாடும். இத்தகைய இன்பத்தைப் பிற விலங்கினங்களும் பெறும் வலம் பெற்றது குறிஞ்சி நிலம்.

மலை நாட்டில் விலங்குகள் நினைத்துப் பார்க்காத இன்பத்தை அடையும்.

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## 15.4 கதையைப் படித்துக் கலந்துரையாடல் செய்க.

### எது சிறந்தது?



பள்ளியின் சிறந்த மாணவரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வு இன்னும் இரு நாள்களில் நடைபெறப் போகிறது. மாணவர்கள், பள்ளி நிருவாகம் யாரைத் தேர்ந்தெடுக்கும் என்பது குறித்து அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள். தங்கள் பெயர் அதில் இடம்பெற்றிருக்குமா? இல்லையா? என்பது பற்றி ஒவ்வொருவரும் ஆர்வத்துடனும் பதட்டத்துடனும் பேசிக்கொண்டு இருந்தனர்.

இரவி எதைப் பற்றியும் கவலை கொள்ளவில்லை. அந்தப் பள்ளியில் அவன் சேர்ந்து ஓராண்டு மட்டுமே ஆகியிருக்கிறது. அவன் படிப்பதிலும் கெட்டிக்காரன்; விளையாடுவதிலும் கெட்டிக்காரன்; கவிதை எழுதுவது, பாடுவது, படம் வரைவது என அனைத்துத் திறமைகளையும் ஒருங்கே பெற்றவன். கடந்த ஓராண்டில் பள்ளி சார்பாக நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்று அனைத்திலும் பரிசுகளை வென்று வருபவன். அதனால், அவனுக்குச் சிறந்த மாணவரைத் தேர்ந்தெடுப்பது குறித்துக் கவலை ஏதுமில்லை. உறுதியாக, சிறந்த மாணவராகத் தன்னைத் தவிர வேறு யாரையும் தேர்ந்தெடுத்திருக்க வாய்ப்பில்லை என்பது அவனது திண்ணமான எண்ணம். இரு நாள்கள் கழிந்தன. சிறந்த மாணவரை அறிவிக்கும் நிகழ்வு நடைபெறத் தொடங்கியது.

மூன்று மாணவர்களின் புகைப்படங்கள் தாங்கிய பலகை திறந்து வைக்கப்பட்டது. மெர்சி, இரவி, முபாரக் ஆகிய மூவரின் படங்களையும் பார்த்த மாணவர்கள் கைதட்டி வரவேற்றனர். ஆனால், இரவியின் முகமோ வாடிவிட்டது மெர்சியையும் முபாரக்கையும் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்து இருப்பார்கள்? என் அளவுக்கு அவர்கள் திறமைசாலிகளா? இது நியாயமே இல்லை என்ற எண்ணம் அவனுக்கு மேலோங்கியது. அவர்கள் இருவரும் இதுவரை ஒரு பரிசுகூட பள்ளி சார்பாகப் பெற்றிருக்கவில்லை. அதுமட்டுமல்ல தேர்வில் முபாரக் மிகக் குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்தான். பிறகு எப்படி அவர்களுக்கும் சிறந்த மாணவர் விருது அளிக்க முடியும் என்று நினைத்தான்.

முபாரக் – நேர்மறை சிந்தனை, பொறுப்புள்ள அணுகுமுறை, ஒத்துழைப்பு மிக்க மனநிலை, "நான் முயற்சி செய்கிறேன்" என்ற வளர்ச்சி மனப்பாங்கு போன்றவற்றைக் கருத்தில்கொண்டு சிறந்த மாணவர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

இரவி – வரையும் திறன், கணினி பயன்பாட்டுத் திறன், பாடும் திறன், பேசும்திறன், குழுவில் இணைந்து பணியாற்றும் திறன் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு சிறந்த மாணவர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

மெர்சி – இடைநின்ற இரு மாணவர்களை வீட்டிற்கே சென்று சந்தித்துப் பேசி அவர்கள் மனம் மாறி பள்ளிக்கு மீண்டும்வரக் காரணமாக இருந்த செயலைக் கருத்தில்கொண்டு சிறந்த மாணவர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

மூவரையும் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்களை அறிந்ததும் இரவியின் முகம் மலர்ந்தது. அவர்களைப் பார்த்து நட்பாகச் சிரித்தான். இனிமேல் திறமையில் மட்டுமல்ல பண்பிலும் சிறந்து விளங்குவேன் என மனத்துக்குள் எண்ணிக்கொண்டான். தன் பள்ளி குறித்து, என் பள்ளி சிறந்த பள்ளி என்று பெருமை கொண்டான்.

படிக்க எடுத்துக்கொண்ட நேரம் ______________________

www.kanimaths.com

# வகுப்புநிலைத் திறன்கள் 51 - 73

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

# வகுப்புநிலைத் திறன்கள்

## உள்ளடக்கம்


1. அகராதியில் பொருளறிதல் ........ 53
2. பொருளுணர்ந்து படித்தல் ........ 54
3. நிறுத்தக்குறிகள் ........ 55
4. உரையாடல் அமைத்தல் ........ 57
5. படித்து விடையளித்தல் ........ 59
6. வினா உருவாக்குதல் ........ 63
7. வடிவம் மாற்றி எழுதுதல் ........ 64
8. விளம்பரம் உருவாக்குதல் ........ 66
9. கடிதம் எழுதுதல் ........ 68
10. கட்டுரை எழுதுதல் ........ 70


www.kanimaths.com

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# வகுப்புநிலைத் திறன்கள்

## என்னால் முடியும்!

## நானே செய்வேன்!





10 ☆ நாள்:

9 ☆ நாள்:

8 ☆ நாள்:

7 ☆ நாள்:

6 ☆ நாள்:

5 ☆ நாள்:

4 ☆ நாள்:

3 ☆ நாள்:

2 ☆ நாள்:

1 ☆ நாள்:

www.kanimaths.com

குறிப்பு : ஒவ்வொரு அலகின் பயிற்சிகளைச் செய்து முடித்தபின், நட்சத்திரக் குறியீட்டிற்கு வண்ணமிடுக.

# 1 அகராதியில் பொருளறிதல்

## 1.1 திருக்குறளின் பொருளை அகராதி உதவியுடன் எழுதுக.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

**சொற்பொருள் :**

அன்பு – ________ நாண் – ________ ஒப்புரவு – ________

கண்ணோட்டம் – ________ வாய்மையொடு – ________

**குறளின் பொருள் :** ________

________

________

www.kanimaths.com

## 1.2 பாடலின் பொருளை அகராதி உதவியுடன் எழுதுக.

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

**சொற்பொருள் :**

இறைத்த – ________ பொசியுமாம் – ________

உளரேல் –________ பொருட்டு – ________

**பாடலின் பொருள் :** ________

________

________

________

________

www.kanimaths.com

# 2 பொருளுணர்ந்து படித்தல்

## 2.1 தொடர்களைப் பொருளுக்கு ஏற்பக் கோடிட்டுப் பிரித்துப் படித்துக்காட்டுக.

அ) யாழ்நிலா / வீட்டுக்குச் / சென்றாளே!

யாழ் / நிலா வீட்டுக்குச் / சென்றாளே!

ஆ) பலகைகள் உடைந்து பேரதிர்ச்சி தந்ததல்லவா?

பல கைகள் உடைந்து பேரதிர்ச்சி தந்ததல்லவா?

இ) அந்த மான் பார்க்க எப்பொழுது செல்வோமெனச் சொல்.

அந்தமான் பார்க்க எப்பொழுது செல்வோமெனச் சொல்.

ஈ) நேற்று தான் கண்ட காட்சிகளை விவரித்துக் கொண்டிருந்தார்.

நேற்றுதான் கண்ட காட்சிகளை விவரித்துக் கொண்டிருந்தார்.

## 2.2 பத்தியைப் பொருளுக்கு ஏற்பக் கோடிட்டுப் பிரித்துப் படித்துக்காட்டுக.

மனிதநேயம் என்ற சொல்லுக்கு மனிதர்கள் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு என்று பொருள். இதில் உயிரிரக்கப்பண்பு இன்றியமையாத இடம்பெறுகிறது. அன்பே மகிழ்ச்சியின் ஊற்றாகும். அதுவே மனித மனங்களில் உள்ள மாசுகளை நீக்கும். மனிதர்களிடம் மட்டுமன்றி மற்ற உயிர்களிடத்தும் அன்புகாட்ட வேண்டும். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் உயிரிரக்கப்பண்பு போற்றுவதற்கு உரியது.

மனிதநேயம் உள்ளவர்கள் இல்லை என்றால் இவ்வுலகத்தில் பல சீர்குலைவுகள் ஏற்படும். மனிதநேயத்தோடு வாழ்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் சீராக இயங்குகிறது.

மனிதநேயத்துடன் வாழ்ந்து வருபவர்களை நினைவுகூரும் வகையில் உலக மனிதநேய நாள் கொண்டாடப்படுகிறது.

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 3 நிறுத்தக்குறிகள்

## 3.1 நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படித்துப் பின்வரும் அட்டவணையை நிரப்புக.

நண்பா! நண்பா! எங்கே இருக்கிறாய்? என் ஆருயிர் நண்பா! இங்கேயா இருக்கிறாய்? ஐயோ! கத்துவதற்குக்கூட வழியில்லாமல் இப்படிக் கம்பிவேலியில் சிக்கிக்கொண்டாயே! நீ தப்பித்துக்கொள்ள ஒரு வழி சொல்கிறேன் கேள். விவசாயி அருகில் வரும்போது நீ இறந்துவிட்டது போல் நடி; அசையாமல் இரு. விவசாயி உன்னை வேலியிலிருந்து விடுவித்தவுடன் நான் மரத்திலிருந்து கா! கா! கா! என்று குரல் கொடுக்கிறேன். உடனே தப்பித்துக்கொள். நீ, நான், நமது நண்பர்கள் அனைவரும் காட்டிற்குள் சென்றுவிடலாம்.

| நிறுத்தக்குறிகள் | தொடர்கள் |
|---|---|
| உணர்ச்சிக்குறி | நண்பா! நண்பா! |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(நிறுத்தக்குறிகள் : உணர்ச்சிக்குறி, காற்புள்ளி, வினாக்குறி, முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி)

www.kanimaths.com

## 3.2 படநிகழ்வுகளைப் பார்த்து அட்டவணைக்கு ஏற்பத் தொடர்களை எழுதுக.



| நிறுத்தக்குறி | தொடர்கள் |
|---|---|
| . | |
| ! | |
| , | |
| ; | |
| ‘ ’ | |
| “ ” | |
| ? | |


www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 4 உரையாடல் அமைத்தல்

## 4.1 உரையாடலை நீட்டித்து எழுதுக.



நகம் :ஏன் அண்ணா, சோகமாக இருக்கிறாய்? என்ன காரணம்?

விரல் : ம்ம்ம்... என்னுடைய சோகத்திற்குக் காரணம் நீதான் தெரியுமா?

நகம் : நானா? எப்படி என்று விளக்கமாகக் கூறுங்கள் அண்ணா!

விரல் : நீதான் என்னைத் தாண்டி நீளமாக வளர்ந்து கொண்டே இருக்கிறாயே!

நகம் : அதுதான் அடிக்கடி என்னை வெட்டி விடுகிறார்களே!

விரல் : இருந்தாலும்... நேற்று ஒரு தாய் தன் மகனிடம், "உன்னுடைய நகத்தை ஒழுங்காக வெட்டாமல் விட்டுவிட்டால் விரலையே வெட்டி விடுவேன்" என்று கூறிக் கண்டித்தார். வளர்வது நீ; வெட்டுவது என்னையா? என்ன கொடுமை இது!

நகம் : ______________________________

______________________________

விரல் : ______________________________

______________________________

நகம் : ______________________________

______________________________

விரல் : ______________________________

______________________________

நகம் : ______________________________

______________________________

விரல் : ______________________________

______________________________

www.kanimaths.com

www.kanimaths.com

## 4.2 குறிப்புகளைக் கொண்டு உரையாடல் அமைக்க.


### விண்வெளி வீரருடன் ஒரு நாள்

விண்வெளிப் பயணம், உணவு, எடை, காற்று, புவியீர்ப்பு விசை, பயண ஆயத்தம், தகவல்தொடர்பு, பயணத்தின் நோக்கம், கண்டுபிடிப்புகள், எதிர்பாராத நிகழ்வுகள், பயணத்தில் பெற்ற அனுபவம்.






www.kanimaths.com











Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 5 படித்து விடையளித்தல்

## 5.1 பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தன் பேராசிரியர் குறித்து மாணவர் ஒருவரின் நாள்குறிப்பிலிருந்து,

மொழி பற்றிய என்னுடைய கருத்து வேறாக இருந்தது. உணர்ச்சிமயமான நிலையிலிருந்து விலகி விருப்பு, வெறுப்பின்றி மொழியைப் படிக்கவேண்டும் என்பது என் கருத்து. ஆனால், என் ஆசிரியர் இக்கருத்தைப் படிப்படியாக மாற்றினார். மொழி என்பது, மூச்செனக் கொள்ளப்பட வேண்டியது என்பதை வலியுறுத்தினார். மூச்சின்மேல் விருப்பம்தான் கொள்ளமுடியும்; வேறு வழியில்லை என்பதை உணர்த்தினார். ஆங்கிலமொழிக்கல்வி, தமிழ்மொழிக்கல்வி, மேல்நாட்டுக் கலைகள், தமிழ்க்கலைகள், மேலைத் தொழில்நுட்பம், தமிழ்த் தொழில்நுட்பம், ஆங்கிலக் கலைச்சொற்கள், தமிழ்க் கலைச்சொற்கள் என்று ஒப்பிட்டுத் தாய்மொழியின் மேன்மைகளை விவரித்தார். தமிழ் இருந்தது, இருக்கிறது, இருக்கும் என்பதை உணர்த்தினார். எதையெல்லாம் அறியவில்லையோ அதை அறியச்செய்தார்; புரிந்துகொள்ளாததைப் புரியச்செய்தார்; கதவுகள் திறக்கத்திறக்க, திறக்க வேண்டிய கதவுகள் இருப்பது தெரியவந்தது. தண்ணீர் பாயப்பாயக் கூழாங்கல் வழவழப்பாவது போல் மாறினேன். ஓர் அறையின் நூற்றாண்டு இருளைப் போக்கிடும் விளக்குபோல அவர் திகழ்ந்தார். ஒவ்வொன்றையும் நினைக்க நினைக்க நினைவின் அடிவாரத்தில் நன்றி சுரக்கிறது.

1. 'ஓர் அறையின் நூற்றாண்டு இருளைப் போக்கிடும் விளக்கு போல' – என்ற தொடர் உணர்த்துவதைத் தெரிவுசெய்க.

   அ) அறையில் உள்ள இருளை விலக்கினார்.

   ஆ) அறையில் வெளிச்சத்தைப் பரப்பினார்.

   இ) வாழ்க்கையின் அறியாமை இருளைப் போக்க உதவினார்.

   ஈ) வாழ்க்கையில் எல்லாமுமாகத் திகழ்ந்தார்.

2. தமிழின் மேன்மைகளை எடுத்துரைக்க எவை உதவின?

3. மாணவருக்குள் நடைபெற்ற மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுவது எது?

4. பத்தியிலுள்ள அடுக்குத்தொடர்களை எடுத்தெழுதுக.

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## 5.2 பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

புத்தகம் படிப்போம்! **புத்தகத் திருவிழா** புதியன அறிவோம்!

நாள் – 2025, செப்டம்பர் 19 முதல் 28 வரை
இடம் – சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்
நேரம் – காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**19.09.25 காலை, 9 மணிக்குத்**
**தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்**



**நாள்தோறும் மாலை 4.00 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்**

**பத்துக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கும் பள்ளி, கல்லூரி மாணவர்கள், அவர்கள் விரும்பும் பதிப்பகத்தில் ரூ. 200 மதிப்புள்ள எந்தவொரு நூலையும் விலையின்றிப் பெற்றுக் கொள்ளலாம்.**



**அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!**

1. விளம்பரத்திற்குப் பொருந்தாத தொடர் எது?
   அ) புத்தகத் திருவிழாவின் தொடக்கநாளில் கல்வி அமைச்சர் கலந்து கொள்கிறார்.
   ஆ) பள்ளி, கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.
   இ) ஒவ்வொரு நாளும் புதிய புத்தகங்கள் வெளியீடு இடம்பெறுகிறது.
   ஈ) புத்தகத் திருவிழாவில் சிறப்புரைகளைக் கேட்க வாய்ப்பிருக்கிறது.

2. புத்தகத்திருவிழா எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?

3. மகிழினிக்கும் நிறைமதிக்கும் புத்தகத் திருவிழாவில் 400 ரூபாய் மதிப்பில் அவர்கள் விரும்பிய இரண்டு நூல்கள் விலையின்றிக் கிடைத்தது எப்படி?

4. அறிவன் மாலை 6.30 மணிக்குப் புத்தகத்திருவிழாவிற்குச் செல்கிறான். அவன் என்னென்ன நூல்கள் வாங்கியிருப்பான்?

5. 'புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!'– என்பது போன்ற புத்தகம் படித்தல் பற்றிய விழிப்புணர்வுத் தொடர்கள் இரண்டினை எழுதுக.

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# மதிப்பீடு – 1

**மொத்த மதிப்பெண்கள் 10**

1. **கீழ்க்காணும் நிறுத்தக்குறிகள் அனைத்தும் பொருந்தும் தொடர் எது?** 10 x 1 = 10

| | | | |
|---|---|---|---|
| “ ” | ? | ! | . |

அ) நீ மட்டும் என்ன நீயும்தான் அருமையாகப் பேசிவிட்டாயே என்றான்

ஆ) அடப்பாவி பேசி விட்டாயே என்றான்

இ) நான் மட்டும் பேசவில்லை என்றான்

ஈ) அவர்களின் மௌன விரதம் முடிந்து போனது

2. **உரிய விடையைத் தேர்ந்தெடுக்க.**

நாளங்காடி அல்லங்காடி– இச்சொற்களின் பொருள் உணர்த்தும் தொடர் எது?

அ) இரவில் மட்டும் செயல்படும் கடைகள்.

ஆ) பகலில் மட்டும் செயல்படும் கடைகள்.

இ) பகலிலும் இரவிலும் செயல்படும் கடைகள்.

ஈ) காலையில் செயல்படும் கடைகள்.

3. **படித்து விடை எழுதுக.**

அமரனும் குமரனும் அகல் விளக்கு வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தனர். தங்கள் வீடுகளில் இருந்து வெளியே வந்த இருவரும் பக்கத்துத் தெருவில் இருந்த குகன் வீட்டிற்குச் சென்று, "தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு வா, வெளியே விளையாடலாம்" என்றனர். இப்போது நாம் யார் வீட்டுக்குச் சென்றால் மின்விசிறியில் காற்று வாங்கலாம்?

அ) அமரன் ஆ) குகன்

இ) குமரன் ஈ) மூவர் வீடுகளிலும் இல்லை

4. **காலம் பொன்னானது– இத்தொடரில் காலம் என்ற சொல்லின் பொருள் என்ன?**

அ) நேரம் ஆ) புதியது

இ) பருவநிலை ஈ) பழையது

5. **எழுத்துகளை முறைப்படுத்தினால் கிடைக்கும் சொற்கள் எவை?**

(க ச் வ ப் ஞ் பு சி ழ் ச), (ன் ப மொ ப் ல மை பு ழி)

அ) வஞ்சப்புகழ்ச்சி, மொழிப்புலமை

ஆ) வஞ்சமொழி, பன்மொழிப் புலமை

இ) பன்மொழி, வஞ்சபுகழ்ச்சி

ஈ) வஞ்சப்புகழ்ச்சி, பன்மொழிப் புலமை

6. **நிறுத்தக் குறிகள் இடவேண்டிய தொடர் எது?**

அ) "அம்மா! எங்கே செல்கிறீர்கள்"? என்று குழந்தை கேட்டது.

ஆ) சேர மன்னர்களில் புகழ்பெற்ற மன்னர் யார்?

இ) 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்பது பழமொழி.

ஈ) திருவள்ளுவர் ஔவையார் பாரதியார் பாரதிதாசன் போன்றவர்கள் தமிழ் புலவர்கள்

www.kanimaths.com

**7. மலரின் விடைக்குச் சுடரின் வினா என்ன?**

சுடர்: ________________________________

மலர்: இந்திய ஏவுகணை நாயகன் கலாம்.

அ) ஏவுகணை நாயகன் என்று ஏன் அழைக்கப்படுகிறார்?

ஆ) ஏவுகணை நாயகன் என்ன செய்தார்?

இ) இந்திய ஏவுகணை நாயகன் யார்?

ஈ) ஏவுகணை நாயகன் கலாம் எந்த ஊர்?

**8. அடிக்கோடிட்ட தொடருக்கான விடை எது?**

திமில் பெருத்த காளைகள் பல கொம்பால் தரையைக்கீறி, புழுதியை எழுப்பின, நிலத்தை நொறுக்கின, போருக்குச் செல்வது போல் வீரத்துடனும் மிடுக்குடனும் வந்தன. களத்தில் அவற்றை எதிர்கொள்ள வீரர்கள் ஆயத்தமாயினர்.

அ) புழுதி எழுப்பும் நிலம்

ஆ) போருக்குச் செல்லும் வீரர்கள்

இ) திமில் உடைய காளைகள்

ஈ) ஆயத்தமாகும் வீரர்கள்

**9. சாலைப்பாதுகாப்பு என்பதற்குப் பொருத்தமான தொடரைத் தெரிவுசெய்க.**

அ) இருசக்கர வாகனத்தில் பின்புறப் பயணிகளும் தலைக்கவசம் அணிவது கட்டாயம்.

ஆ) அலைபேசியில் பாட்டுக் கேட்டபடி வாகனம் ஓட்டக்கூடாது.

இ) விதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே சாலையைக் கடக்க வேண்டும்.

ஈ) இவை மூன்றும்.

**10. விடுபட்ட அனைத்து இடங்களுக்கும் பொருத்தமான ஒரே சொல் எது?**

மதுரை ______________ கோயில்கள் நிறைந்த அழகிய சுற்றுலாத்தலம். அம் ______________ சிலப்பதிகாரத்தோடு தொடர்புடையது. மேலும், அந்த ______________ பல புலவர்களை உருவாக்கிய பெருமை உடையது. எனவே, மதுரை ______________ தூங்கா நகரம் எனவும் அழைக்கப்படுகிறது.

அ) மலை ஆ) பெரிய

இ) நகரம் ஈ) மாநகர்

**விடைத்தாள்**

| | |
|---|---|
| 1. அ ஆ இ ஈ | 6. அ ஆ இ ஈ |
| 2. அ ஆ இ ஈ | 7. அ ஆ இ ஈ |
| 3. அ ஆ இ ஈ | 8. அ ஆ இ ஈ |
| 4. அ ஆ இ ஈ | 9. அ ஆ இ ஈ |
| 5. அ ஆ இ ஈ | 10. அ ஆ இ ஈ |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 6 வினா உருவாக்குதல்

## 6.1 விடைக்கான வினா உருவாக்குக.

விடை : ஆகஸ்டு –12 உலக யானைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

வினா : ______________________________

விடை : "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் பாரதியார்.

வினா : ______________________________

விடை : குடைவரைக் கோயில்கள் தொடங்கி, தனித்தனிக் கற்சிற்பங்கள் வரை காணப்படுவது மாமல்லபுரத்தின் சிறப்பு.

வினா : ______________________________

விடை : தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர்.

வினா : ______________________________

## 6.2 வினாச் சொல்லைக் கொண்டு வினா அமைத்து எழுதுக.

| வினாச்சொல் | வினா |
|---|---|
| எது? | |
| யார்? | |
| எப்போது? | |
| எங்கே? | |
| ஏன்? | |
| எப்படி? | |

www.kanimaths.com

# 7 வடிவம் மாற்றி எழுதுதல்

## 7.1 குறிப்புகளைப் பயன்படுத்திப் பத்தியாக எழுதுக.

### தமிழர் மருத்துவம்



தொடக்க காலத் தமிழர்கள் – நோய்க்கான மருந்து – தாவரங்கள் – வேர், பட்டை, இலை, பூ, காய், கனி – பயன்பாடு – நோய்கள் பெருகுதல் – இரசாயன மருந்துகள் – பக்க விளைவுகள் – தமிழர் மருத்துவம் – பக்க விளைவுகள் இல்லை – தனித்துவமான பார்வை – சுற்றுச்சூழலுக்குச் சிறந்த மருத்துவம் – மருந்துகள் சுற்றுச்சூழலைச் சிதைக்காது – சிறப்பு – நோய்க்கான சிகிச்சை – மீண்டும் வராதிருப்பதற்கான உணவுகள் – நோயில்லா மனிதர் ஆக்குதல்.

www.kanimaths.com

## 7.2 குறிப்புகளைப் பயன்படுத்தி அறிக்கை எழுதுக.

**வனவிலங்கு வாரவிழா**

| | | |
|---|---|---|
| இடம் | : | அரசு உயர்நிலைப்பள்ளி |
| நாள் | : | 04.10.2025 |
| நேரம் | : | 9.30 மணிமுதல் 12.00 மணிவரை |
| தலைமை | : | அ.பெரியசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர். |
| சிறப்பு விருந்தினர் | : | திரு. கலைச்செல்வன், வனவிலங்கு – பறவைகள் ஆர்வலர், இயற்கை ஆர்வலர், புகைப்படக் கலைஞர். |

**விழாவின் நோக்கம்**

- வனவிலங்குப் பூங்காக்கள், காப்பகங்களைப் பார்வையிடல்.
- வனவிலங்குச் சட்டங்களை மதித்தல்.
- வெளிநாடு, உள்நாட்டுப் பறவைகளுக்குச் சிறப்புப் பாதுகாப்பு கொடுத்தல்.

**நிகழ்வுகள்**

**பேரணி நடத்துதல் – உடற்கல்வி ஆசிரியர்கள்**

- வனப்பாதுகாப்பு நாடகம் – பசுமைப்படை மாணவர்கள்
- விழாத் தொகுப்பாளர்கள் – தமிழ்த்துறை ஆசிரியர்கள்
- விழா ஏற்பாட்டாளர்கள் – அறிவியல் ஆசிரியர்கள்

www.kanimaths.com

# 8 விளம்பரம் உருவாக்குதல்

## 8.1 செய்தியைப் படித்து விளம்பரத்தை நிரப்புக.

திருவாரூர், வடக்கு வீதியில் உள்ள தேனம்மாள் கலையரங்கில் 17. 09. 2025 முதல் 19. 09. 2025 வரை, மூன்று நாள்கள் காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மூலிகைக் கண்காட்சி நடைபெற இருக்கிறது. ஆடுதொடா, தும்பை, துளசி, கற்றாழை, தூதுவளை, நிலவேம்பு, ஓமவல்லி போன்ற மூலிகைகள் காட்சிப்படுத்தப்படவும் விற்பனை செய்யப்படவும் இருக்கின்றன. 10 மூலிகைச்செடிகள் வாங்குவோருக்கு ஒரு பூவாளி இலவசமாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் கண்காட்சியைக் கட்டணமின்றிக் கண்டுகளிக்கலாம். மேலும், மூலிகைச்செடி பராமரிப்பு குறித்த கையேடுகளும் வழங்கப்பட உள்ளன. கண்காட்சியைக் கண்டு பயனடையுமாறு தோட்டக்கலைத்துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

www.kanimaths.com

அள்ளிச் செல்லுங்கள்! அருமருந்தான மூலிகைச் செடிகளை!

### மூலிகைக் கண்காட்சி

நாள் : ____________ நேரம் : ____________

இடம் : ____________

17. 09. 2025 காலை 10 மணிக்குச் சித்த மருத்துவர் ____________ தொடங்கி வைக்கிறார். ____________, ____________, ____________, ____________, ____________

மூலிகைகளை அள்ளிச் செல்லலாம்

10 மூலிகைச் செடி ____________
____________

மூலிகைச் செடிகள் வாங்கும் அனைவருக்கும் ____________ வழங்கப்படும்.

தோட்டக்கலைத்துறை, திருவாரூர்



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## 8.2 கீழடி அருங்காட்சியகம் பற்றி விளம்பரம் உருவாக்குக.

- மதுரை நகருக்கு அருகே கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப்பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள், சோழிகள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக் கல்வகைகள், சிவப்பு – கருப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், சங்குவளையல்கள், எலும்பினாலான கூர்முனைகள், தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர்சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரைஓடுகள் போன்ற தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன.

நாள், இடம், நேரம், பார்வையாளர்கள், தொல்லியல் பொருள்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுமாறு எழுத வேண்டும்.

www.kanimaths.com

# 9 கடிதம் எழுதுதல்

## 9.1 மின்னஞ்சல் வழிக் கடிதம் எழுதுக.

*அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. அனுபவங்களிடமிருந்து அதிகம் கற்றுக்கொள். உழைக்கத் தயங்காதே. உழைக்கும்வரை உயர்ந்து கொண்டிருப்பாய். உனக்கான பாதையை நீயே உருவாக்கப் பழகு. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்* – என்றவாறு முடிவுபெற்றுள்ள உங்கள் தாயின் கடிதத்திற்கு மின்னஞ்சல் வழியாகப் பதில் கடிதம் எழுதுக.

மின்னஞ்சல் முகவரி : xxxxxxxxxx@gmail.com

பொருள் :

அனுப்புக

www.kanimaths.com

## 9.2 அலைபேசித் தகவலைக்கொண்டு நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

- தென்றல் நாளிதழ் அலுவலகத்தில் இருந்து... வந்த அலைபேசி தகவல்

தென்றல் இதழ் சார்பாக, சமூகத்திற்குப் பங்காற்றியவர்களைத் தேர்ந்தெடுத்து விருது வழங்கிச் சிறப்பிக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்கிறோம். உங்கள் ஊர் மக்களுக்குத் தொண்டு செய்த ஒருவரை இந்த விருதுக்குப் பரிந்துரைக்க, தென்றல் நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் அனுப்புங்கள்.



- உங்கள் கடிதத்தில் அந்த நபர் யார் என்று சொல்லுங்கள்.
- உள்ளூர் சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் அவர் செய்த நற்செயல் ஒன்றை விவரித்து எழுதுங்கள். (எ.கா. மரம் நட்டு வளர்த்தல்)
- அவர் விருது பெறுவதற்கு ஏன் தகுதியானவர்? என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதை விளக்குங்கள்.

www.kanimaths.com

# 10 கட்டுரை எழுதுதல்

## 10.1 தலைப்புக்கேற்ற கட்டுரைக் குறிப்புகளை எழுதுக.

| | |
|---|---|
| தலைப்பு | எனக்குப் பிடித்த ஆளுமை |
| உட்தலைப்புகள் | |
| பழமொழிகள் | |
| முழக்கத்தொடர்கள் | |

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## 10.2 உட்தலைப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

முன்னுரை – ஊர் அமைவிடம் – ஊரின் எல்லை – ஊரின் சிறப்பு – உற்பத்தியாகும் பொருள்கள் – வரலாற்றுச் சிறப்புகள் – முடிவுரை

www.kanimaths.com

# மதிப்பீடு – 2

**மொத்த மதிப்பெண்கள் 10**

**1. தொடருக்குரிய வினா எது?**

மழைநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

அ) மழைநீரை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

ஆ) மழைநீரை ஏன் பயன்படுத்த வேண்டும்?

இ) மழைநீரை எதற்குப் பயன்படுத்த வேண்டும்?

ஈ) மழைநீரை யார் பயன்படுத்த வேண்டும்?

**2. சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்– இவ்வடி உணர்த்தும் சிறப்பு எது?**

அ) வணிகத் தொழில் சிறப்பு.

ஆ) நெசவுத்தொழில் சிறப்பு.

இ) உழவுத் தொழில் சிறப்பு.

ஈ) குடிசைத்தொழில் சிறப்பு.

**3. கணினி என்பதற்குத் தொடர்புடைய வினா எது?**

அ) 'மயில் பொறியை' வானில் பறக்க விட்டோமா?

ஆ) மணிபல்லவத் தீவுக்குப் பறந்து சென்றோமா?

இ) விண்வெளியில் தடம் பதித்து விட்டோமா?

ஈ) விசைப்பலகையில் தட்டச்சு செய்ய முடியுமா?

**4. பொருளுக்குப் பொருத்தமான பழமொழி எது?**

**பொருள்: வாய்ப்புக் கிடைக்கும் பொழுதே சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**

அ) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

ஆ) ஆழம் தெரியாமல் காலை விடாதே.

இ) கூழானாலும் குளித்துக் குடி.

ஈ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

**5. கடிதத்தில் இடம்பெற வேண்டிய முறையான வரிசை எது?**

அ) இப்படிக்கு, பெறுநர், பொருள், அனுப்புநர்

ஆ) பெறுநர், அனுப்புநர், பொருள், இப்படிக்கு

இ) பொருள், அனுப்புநர், இப்படிக்கு, பெறுநர்

ஈ) அனுப்புநர், பெறுநர், பொருள், இப்படிக்கு

**6. அலுவலகக் கடிதத்தில் 'இப்படிக்கு' என்பதன்கீழ் எது இடம் பெறும்?**

அ) தங்கள் அன்புள்ள

ஆ) தங்கள் உண்மையுள்ள

இ) தங்கள் பிரியமுள்ள

ஈ) தங்கள் பாசமுள்ள

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

**7. குறிப்புகளைக் கொண்டு உருவான தொடர் எது?**

**குறிப்பு: 1947– ஆகஸ்ட் 15– இந்தியா– விடுதலை**

அ) 1947, ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது.

ஆ) 1947, ஆகஸ்டு 15ஆம் நாள் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது.

இ) 1947, ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா குடியரசானது.

ஈ) 1947, ஆகஸ்டு 15ஆம் நாள் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.

**8. விண்வெளி சார்ந்த கட்டுரை எழுதுவதற்கான உட்தலைப்புகள் எவை?**

அ) நீர்நிலைகள்– கால்நடைகள்– உழவுத்தொழில்

ஆ) கோள்கள்– விண்மீன்கள்– பால்வெளி மண்டலம்

இ) போக்குவரத்து–தொடர்வண்டி நிலையம்–மகிழுந்து

ஈ) தொழிற்சாலைகள்– கைவினைப் பொருள்கள்– கண்காட்சி

**9. மனுநீதிச் சோழன் நீதி வழுவாத மன்னன் ஆவார் – தொடர் உணர்த்தும் பொருள் எது?**

அ) மனுநீதிச் சோழன் சுயநலமிக்க மன்னன்

ஆ) மனுநீதிச் சோழன் நீதி தவறிய மன்னன்

இ) மனுநீதிச் சோழன் நடுநிலைமை தவறா மன்னன்

ஈ) மனுநீதிச் சோழன் பொறுப்பற்ற மன்னன்

**10. உட்தலைப்புக்குப் பொருத்தமான கட்டுரைத் தலைப்பு எது?**

**உட்தலைப்புகள்: பல்துறை நூல்கள் – அமைதி காத்தல் – உறுப்பினர் ஆதல் – நூல் பல கல்**

அ) நூலகம் ஆ) புத்தகம்

இ) பள்ளிக்கூடம் ஈ) கல்லூரி

www.kanimaths.com

## விடைத்தாள்

| | |
|---|---|
| 1. அ ஆ இ ஈ | 6. அ ஆ இ ஈ |
| 2. அ ஆ இ ஈ | 7. அ ஆ இ ஈ |
| 3. அ ஆ இ ஈ | 8. அ ஆ இ ஈ |
| 4. அ ஆ இ ஈ | 9. அ ஆ இ ஈ |
| 5. அ ஆ இ ஈ | 10. அ ஆ இ ஈ |

www.kanimaths.com

# THIRAN

(Targeted Help for Improving Remediation & Academic Nurturing)

www.kanimaths.com

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான $24 \times 7$ கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

CHILD LINE 1098 NIGHT & DAY

அழையுங்கள் குழந்தை உதவி எண் **1098**
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?

14417 கல்வித் தகவல் மையம்

அழையுங்கள் **14417**
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# KANI MATHS

**No.1 Educational Website & You-tube Channel**

கீழே கொடுக்கப்பட்டுள்ள **Click Here** என்ற வார்த்தையை பயன்படுத்தி அனைத்து வகுப்பிற்கும் அனைத்து பாடங்களுக்கும் **Study Materials** மற்றும் **Question Paper** களை நமது **www.kanimaths.com** என்ற இணைய தளத்தில் பார்த்து **Pdf** - இல் பதிவிறக்கம் **download** செய்து கொள்ளலாம்.

**Website Home Page:** CLICK **Youtube Channel Home Page:** CLICK

| Sl. No | Content | File Type | Sl. No | Content | File Type |
|---|---|---|---|---|---|
| 1 | STD 1 | Click Here | 13 | Notes of Lesson | Click Here |
| 2 | STD 2 | Click Here | 14 | Competitive Exam | Click Here |
| 3 | STD 3 | Click Here | 15 | Focus Learners | Click Here |
| 4 | STD 4 | Click Here | 16 | Books and Guide | Click Here |
| 5 | STD 5 | Click Here | 17 | Teacher Details | Click Here |
| 6 | STD 6 | Click Here | 18 | Leave Details | Click Here |
| 7 | STD 7 | Click Here | 19 | EMIS | Click Here |
| 8 | STD 8 | Click Here | 20 | After +2 | Click Here |
| 9 | STD 9 | Click Here | 21 | புயல் | Click Here |
| 10 | STD 10 | Click Here | 22 | சிறார் திரைப்படம் | Click Here |
| 11 | STD 11 | Click Here | 23 | கலைத்திருவிழா | Click Here |
| 12 | STD 12 | Click Here | 24 | தினம் ஒரு புத்தகம் | Click Here |

**If Click Icon then Join Group**

WhatsApp WhatsApp WhatsApp WhatsApp

**SUBSCRIBE KANI MATHS EDUCATION YOUTUBE CHANNEL**